தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆனி 13, திருவள்ளுவர் ஆண்டு—2055

2024 ஜூன் 27, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை.”

இருப்போர் இல்லாதோர் என்றில்லாமல், கிடைத்ததைப் பகிர்ந்து கொண்டு, எல்லா உயிர்களும் வாழ வேண்டும் என்ற சமநிலைக் கொள்கைக்கு ஈடானது வேறு எதுவுமே இல்லை.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 101, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை *அமைச்சர் அவர்கள்.*

102—

பேரூராட்சி அலுவலகக் கட்டடம்

***4526—திரு. ட்டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை பேரூராட்சி அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தேன்கனிக்கோட்டை பேரூராட்சியில் 2024–2025 ஆம் ஆண்டின் மூலதன மானிய நிதித் திட்டத்தின்கீழ் புதிய அலுவலகம் கட்ட ரூ.99 இலட்சம் மதிப்பீட்டில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, பணி மேற்கொள்ள தொடர் நடவடிக்கையில் உள்ளது. புதிய அலுவலகக் கட்டடம் கட்ட மேற்கூறியவாறு நடவடிக்கையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி தொகுதியில், தேன்கனிக்கோட்டை பேரூராட்சி அலுவலகம் என்பது பழமையான கட்டடத்திலே இயங்கி வருகிறது. மேற்கூரை மற்றும் சுற்றுச் சுவர்கள் பழுதாகி மழைக் காலத்திலே மழை நீர் ஒழுகுகிறது. ஆகவே, புதிய கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று வினா எழுப்பியிருந்தேன். மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் புதிய கட்டடம் கட்டித்தரப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்கு எனது சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், என்னுடைய தேன்கனிக்கோட்டை பேரூராட்சி என்பது 18 wards-ஐ உள்ளடக்கி, 33,500 அளவில் மக்கள்தொகை கொண்ட வளர்ந்து வருகின்ற ஒரு பெரிய பேரூராட்சி. ஆகவே, அதை நகராட்சியாகத் தரம் உயர்த்த மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

2024 ஜூன் 27]

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள்தொகையின் அடிப்படையில் பேரூராட்சிகளை நகராட்சியாகத் தரம் உயர்த்துவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் மக்கள்தொகை எவ்வளவு என்று பார்க்க வேண்டும். நாளை மறுநாள் நம்முடைய சட்டமன்றத்திலே* amendment *ஒன்று கொண்டு வர இருக்கிறோம். "மக்கள்தொகை பத்தாயிரத்திற்கு மேலும், ஆண்டு வருமானம் முப்பது இலட்சத்திற்கு குறையாமலும் உள்ள வளர்ச்சியடைந்து வரும் பகுதிகள் பேரூராட்சி எனவும், மக்கள்தொகை முப்பதாயிரத்திற்கு மேலும், ஆண்டு வருமானம் ஐம்பது இலட்சத்திற்கு குறையாமலும் இருப்பின் நகராட்சி எனவும் அளவுகோல் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது." (தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம், 1998 அத்தியாசம்* II *பிரிவு 3*(a) *மற்றும்* (b)). *ஏற்கெனவே எப்படி இருந்தது என்று சொன்னால், ஓர் அளவுகோல் இருந்தது. ரூ.30 கோடி இருக்க வேண்டும், 3 இலட்சம் இருக்க வேண்டும் என்றெல்லாம் அதற்கொரு நிர்ணயம் செய்திருந்தார்கள். இப்போது புதிய* amendment *மூலமாக தேவையான இடத்தில், நகராட்சியாகவோ, மாநகராட்சியாகவோ தரம் உயர்த்துவதற்கு அரசிற்கு அதிகாரம் வழங்க, ஒரு சட்டத் திருத்தம் இன்னும் இரண்டு நாட்களில் வர இருக்கிறது. அந்தச் சட்டத் திருத்தத்தை சட்டமன்றத்திலே கொண்டு வந்தபிறகு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை உடனடியாகச் செய்ய இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால், ஜனத்தொகை சரியாக இருக்குமானால், அது நம்முடைய பேரூராட்சிதானே, நகராட்சியாகத் தரம் உயர்த்த எந்தச் சங்கடமும் இல்லை, மாற்றித் தரப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத் திருத்தம் வந்தபிறகு நகராட்சியாகத் தரம் உயர்த்தப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதேபோல, அந்தப் பேரூராட்சியில் பொது மக்கள் நடைபயிற்சி மேற்கொள்ள, பூங்கா போன்று எதுவுமே இல்லை. தேவராஜன் ஏரி 35 ஏக்கர் பரப்பளவில் இருக்கிறது. அந்த தேவராஜன் ஏரியில் பூங்கா அமைத்து பொது மக்கள் நடைபயிற்சி மேற்கொள்ள, நடைபயிற்சிப் பாதை அமைத்துத் தர மாண்புமிகு*

அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுதான் நம்முடைய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், பாசனமற்ற ஏரிகளைப் பராமரிப்பதற்கு மட்டும் அனுமதியைத் தருகிறேன் என்று சட்டமன்றத்தில் அறிவித்திருக்கிறார்கள். அப்படி அந்த ஏரி பாசனமற்ற ஏரியாக இருந்தால், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் அனுமதியைப்பெற்று, நீங்கள் சொல்கிறபடி அதைத் தரம் உயர்த்தி, நடைபாதை அமைத்து, பூங்கா அமைத்து அனைத்துப் பணிகளும் செய்து தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

103—

இரு வழித்தடச் சாலை

***12927—திரு. மா. சின்னதுரை:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கீரனூரிலிருந்து புலியூர் வழியாக கிள்ளுக்கோட்டை வரை செல்லும் சாலையை இரு வழித்தடச் சாலையாக அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கீரனூர்—கிள்ளுக்கோட்டை சாலை 19.6 கிலோ மீட்டர் நீளமுள்ள மாவட்ட இதர சாலையாகும். இந்தச் சாலையில் 3.8 கிலோ மீட்டர் சாலைப் பகுதியை 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரு வழித்தடமாக அகலப்படுத்துகிற பணி இப்போது